எல்லாமே எண்ணங்கள்



சுவாமி பிரபஞ்சநாதன்

எல்லாமே

எண்ணங்கள்



சுவாமி பிரபஞ்சநாதன்

நூல் விளக்கம்

நூலின் பெயர்	:	எல்லாமே எண்ணங்கள்
ஆசிரியர்	:	சுவாமி பிரபஞ்சநாதன்
மொழி	:	தமிழ்
வகை	:	தன்னாட்டம்
முதற்பதிப்பு	:	2020
நூலின் அளவு	:	டெம்மி
பக்கங்கள்	:	47
தாள்	:	A5 (5.83” X 8.27”)
எழுத்து அளவு	:	12 புள்ளிகள்
உரிமை	:	அனைவருக்கும்
கட்டமைப்பு	:	சாதா பைண்டு அட்டை
கணினி அச்சு	:	ஓம் கிராபிக்ஸ்
விலை	:	ரூபாய் 60/-

எண்	பொருளடக்கம்	பக்கம்

எல்லாமே எண்ணங்கள்

1. எண்ணங்களே மூலம்

‘எல்லாமே எண்ணங்கள்’ என்பதை ஏற்றுக் கொள்ள முடியாமல், மறுக்கச் செய்வதும், **‘ஒரு எண்ணம்’** என்பதை, எவன் ஒருவன் எளிதாக அறிகின்றானோ, அவனே எண்ணங்களில் இருந்து முழுமையாக விடுபட்டு, தன் இருப்பை தனித்து அறியக்கூடிய தகுதியை அடைகின்றான்.

நான் காணுகின்ற இந்த **“உலகம், ஜீவன், ஈஸ்வரன்”** என்ற எல்லாமே, என் எண்ணங்களால் மட்டுமே உண்டாக்கிக் கொள்ளப்பட்ட தனித்துவம் வாய்ந்த **“எண்ணங்கள்”** என்று அறிவதே இங்கு **‘ஞானம்’** எனப்படுகின்றது.

இந்த எண்ணங்கள் எனக்கும், மற்றவர்களுக்கும் மாறுபடுகின்றது. என்னுடைய பிறப்புச் சூழல், சமூகம், மதம், கடவுள் என்று அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு, எனது எண்ணங்கள் மற்றவைகளைச் சார்ந்து என்னிடம் உதயமாகின்றது.

இதை **‘நான்’** என்ற என்னுடைய ஆணவ எண்ணம் அவ்வளவு எளிதில் என்னை ஏற்க விடாது. காரணம்,

எண்ணங்களினால் உண்டான இந்த **‘நான்’, ‘எனது’** என்பது என்னுள் மிகவும் ஆழமாக கற்பித்துக் கொள்ளப்பட்ட **‘ஒரு எண்ணம்’** என்பதை அறிவதே இங்கு கூறப்படுகின்ற விசயம் ஆகும்.

அனைத்துமே எண்ணங்களால் உண்டான **நாம, ரூபங்கள் (பெயர்களும், உருவங்களும்)** என்பதை அறிய விடாமல், இந்த மனம் என்ற ‘**மாயை**’ என்னை மிகவும் மதி மயக்கத்தில் வைத்திருக்கின்றது.

உண்மையில், **‘என்னை நானறிவது’** என்பது, என்னிடம் உதிக்கின்ற **‘எண்ணங்களை அறிவதே’** ஆகும்.

அதுப்போன்றே, இதுவரை நான் அபிமானம் வைத்துக் கொண்டிருக்கின்ற இந்த உலகம், உறவுகள், மற்றும் என்னுடைய மனைவி, மக்கள், சொத்து, சுகங்கள் எல்லாமே, எண்ணங்களின் வெளிப்பாடு என்று கூறும் பொழுது, இதை என்னால் ஏற்க முடியாமல், எடுத்தவுடனேயே உதாசீனம் செய்ய வைப்பதும் என்னுடைய தனிப்பட்ட **‘ஆணவ எண்ணமே’** ஆகும். ஆம்! அது உதாசீனம் என்ற பெயரைக் கொண்ட ஒரு ஆணவ எண்ணம் எனலாம்.

அந்த அளவிற்கு ஆணவம் கொண்ட, **‘நான்’** என்ற ஒரு எண்ணம், பல்வேறு **நாம, ரூபங்களால்** ஆன எண்ணங்களுக்குக் காரணமாக இருப்பதை அறிந்து, அதனால்

ஆட்டுவிக்கப்படுவதை புரிந்துக் கொள்வதே இங்கு **‘அறிவு’** என்று கூறப்படுகின்றது.

எனக்கு ஒரு எண்ணம் கேள்வியாக வெளிப்படுமானால், அந்த கேள்வி இதுதான் ……

இதுவரை நான் அனுபவித்துவந்த மனைவி, மக்கள், உற்றார், உறவினர்கள், சொத்து, சுகங்கள் மற்றும் இந்த மொத்த உலகம் என எல்லாம் என்னுடைய எண்ணங்கள் என்று மட்டும் கூறினால், ஆம்! என்று இதை ஏற்றுக்கொள்வதும், ஒரு வகையில் இதில் இருந்து **“நான்”** தப்பித்துக் கொள்ள உண்டாகிய ஒரு எண்ணம் எனலாமே என்றால், இங்கும் இதுப்போன்ற எண்ணங்களால் என்னுடைய மனம் எந்த அளவிற்கு என்னை ஏமாற்றுகின்றது என்பதை அறிவதே இங்கு **“அறிவு”** எனப்படுகின்றது.

அதாவது, நான் இந்த உறவுகளுக்கு துரோகம் செய்து, அவர்களுக்கு உதவாமல், தப்பித்துக் கொள்ளச் செய்கின்ற ஒரு உதவாக்கரை உபதேசம் இது என்று ஒரு எண்ணம் என்னுள் எழுவது எப்படி இருக்கின்றது என்றால், ஒரு பூனைக் கண்ணை மூடிக்கொண்டு இந்த உலகம் இருண்டு விட்டது என்று எண்ணுவதற்கு ஒப்பாகும்.

அதாவது, நான் மட்டுமே என்னையும், என் உறவுகளையும் காப்பாற்றுவதாக, என்னை எண்ண வைத்து, என்னுடைய உதவி இன்றி இவர்கள் வாழ முடியாது, என்பது போன்ற ஒரு மாய வலையை அழகாக பின்னி, அதில்

என்னை சிறை வைத்து, அதிலிருந்து வெளியே வர முடியாத அளவிற்கு ஒரு ஆழமான **'அன்பு'** என்ற ஒரு எண்ணம் என்னை எந்த அளவிற்கு ஆட்கொண்டிருக்கின்றது என்று அறியாமல் இருப்பதையே இங்கு **"அறியாமை"** எனப்படுகின்றது.

என்னுடைய உடல் மரணத்தை தழுவியவுடன், இந்த உறவுகளுக்கும், உலகத்திற்கும் **"நான்"** எப்படி இனி பயன்பட மாட்டேனோ, அதுப்போன்றே, இந்த மனம் என்னிடம் இருந்து விடுபட்டு, மரணத்தை தழுவியவுடன், எனக்கு இதே உறவுகளும், உலகமும் இனி பயன்படாது.

காரணம், அதன்மீது இருந்த அபிமானம் மனதுடன் சேர்ந்து மரணமடைந்து விட்டது எனலாம். மற்றபடி, என்னுடைய உடல் என்பது இங்கு இருந்துக் கொண்டு இனி எல்லாவற்றையும் பற்றில்லாமல் செய்யும்.

அதாவது, என் கண்முன்னே காணப்படுகின்ற அனைத்தும் என்னால் கற்பித்துக் கொள்ளப்பட்ட எண்ணங்களே என்று நான் அறியும் பொழுது, அவைகளினால் நான் சிறிதும் பாதிக்கப்பட மாட்டேன். அவைகளிடம் விருப்பு, வெறுப்பு காட்ட மாட்டேன்.

என்னுடைய இந்த கண்ணிற்குத் தெரிகின்ற ஸ்தூல உடலே, சூக்ஷுமமான (கண்ணிற்குத் தெரியாத) மனதின் வெளிப்பாடுதான் எனும் உண்மையை நான் உணரும் பொழுது, என் எதிரே இருக்கின்ற அனைத்தும் எண்ணங்களின்

வெளிப்பாடு என்பதை அறிந்து, அதில் மயக்கமடைவது என்பது, இனி எனக்கு ஒரு பொழுதும் சாத்தியமில்லை.

ஆம், இங்கு எண்ணங்கள் என்பது, எல்லோருக்கும் தனித்தனியானது, நம் ஒவ்வொரு வருக்கும் ஒருவகையில் தனித்துவம் வாய்ந்தது.

அதாவது, அவரவர்கள் பிறவிச் சூழ்நிலை, தேசம், காலம், கல்வி, சமுதாயம், மதம், கடவுள் என பலவாறாக பல வகைகளில் திணிக்கப்பட்டதின் விளைவாக, சேகரித்துக் கொண்ட பல்வேறு எண்ணப் பதிவுகளுக்கு ஏற்ப, இந்த உலகம் அவரவர்களுக்கு ஏற்றவாறு தனித் தனியாக விரிகின்றது.

அதாவது, சிலருக்கு இந்த உலகம் இன்ப மயமாகவும், சிலருக்கு இந்த உலகம் துன்ப மயமாகவும், சிலருக்கு அனைவரும் நல்லவர்களாகவும், சிலருக்கு அனைவருமே கெட்டவர்களாகவும், சிலருக்கு இந்த உலகம் உண்மையாகவும், சிலருக்கு இந்த உலகம் பொய்யாகவும் இருப்பதற்கு, இதுவே காரணம் ஆகும்.

அவரவர்களின் மீது தனிப்பட்ட முறையில், ஏற்றி வைக்கப்பட்ட **‘எண்ணங்களே’** இந்த ஏற்றத் தாழ்வுகளுக்கு காரணம் ஆகும். இதில், மிகவும் நெருங்கிய உற்றார், உறவுகளால் பாதிக்கப்படும் பொழுது துன்பத்தையும், அவர்களால் ஆராதிக்கப்படும் பொழுது இன்பத்தையும் இந்த மனம் அடைகின்றது.

ஆனால், இவைகள் அனைத்தும் எண்ணங்களின் வெளிப்பாடு, என்று எண்ணும் பொழுது, இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், இந்த மனம் சற்று சமாதானத்தில் இளைப்பாறுகின்றது.

இந்த அமைதி, சமாதானம் போன்றவை உண்டாக வேண்டுமெனில், இவைகள் அனைத்தும் மனம் வெளிப்படுத்தும் எண்ணங்களே என்பதை அறிந்து, எண்ணங்கள் ஏதுமற்ற அமைதியான சூழலில், மௌனமாக தன் இருப்பில், தன் சுயத்தில் இருக்கும் பொழுது மட்டுமே, என்னால் எளிதாக ஆனந்தத்தை உணர முடிகின்றது.

அதைவிடுத்து, எத்தனை விதமான கேள்விகளை கேட்டு, என் எதிரே இருப்பவரை வாதத்தால் மடக்குவதாக கருதுவது என்பதும், என்னுடை மனதின் சேஷ்டைகள் என்பதை அறியும் பொழுதுதான், இந்த எண்ணங்களினால் மனம் அலைக்கழிக்கப்படுவதையும், எண்ணங்கள் அற்ற நிலையில், மனம் அமைதியை அடைவதையும் என்னால் அறிய முடிகின்றது.

அந்த நிலையான அமைதியில்தான், ஆனந்தம் முழுமையாக குடி கொண்டிருப்பதையும், என்னால் அறிந்துக் கொள்ள முடிகின்றது. அத்தகைய நிலையான ஆனந்தத்திற்கு நித்தமும் தடையாக இருப்பது, **'நான்', 'எனது'** என்ற அபிமான எண்ணங்களே என்பதை அறிவதற்கு, இங்கு **'அறிவு'** மிகவும் அவசியமாகின்றது.

2. அறிவும், அறியாமையும்

இந்த பிரத்யேகமான **ஆறாவது அறிவு** மனிதனுக்கு மட்டுமே முக்கியத்துவம் வாய்ந்ததாக கொடுக்கப்பட்டதின் நோக்கம், முத்தை விரும்பியவன் சமுத்திரத்தின் ஆழத்தற்குச் சென்று, உயர்வான அந்த முத்தை அடைவதுப் போன்று, சித்தை விரும்பியவன் மனதின் ஆழத்திற்குச் சென்று, உயர்வான அந்த சித்தை (அறிவை) அவனால் அறிய முடிகின்றது.

அந்த அறிவை (சித்தை) இருப்பாக (சத்தாக) அடைந்தவனால் மட்டுமே, இந்த சம்ஸார சமுத்திரமான இன்ப, துன்பங்கள் என்ற சமுத்திரத்திலிருந்து, முழுமையாக கரை சேரவும் முடிகின்றது.

ஆக, எல்லாமே இந்த எண்ணங்களினால் உண்டான மனதின் வெளிப்பாடு எனும்பொழுது, இந்த எண்ணங்களை விசாரித்து, அனைத்து எண்ணங்களுக்கு மூலமான **"நான்"** என்ற ஒரு எண்ணம் இறப்பதே இங்கு **'முக்தி'** எனப்படுகின்றது.

அதாவது, *மனம் இறப்பது முக்தி!, உடல் இறப்பது மரணம்!*

இதை அறிவதே இங்கு **'அறிவு'** அல்லது **'ஞானம்'** எனப்படுகின்றது.

பல்வேறு எண்ணங்களால் சூழப்பட்ட இந்த சூக்ஷுமமான மனம், தன்னால் கற்பித்துக் கொள்ளப்பட்ட இந்த ஸ்தூல உடலை, தன்னை அறியாமலேயே மரணத்தை நோக்கி, அனுதினமும் அழைத்துச்செல்கின்றது என்பதைக்கூட அறிய முடியாத அளவிற்கு **"நான்"** என்ற இந்த ஒரு எண்ணம் என்னுள் ஆழமாக இருந்துக் கொண்டு, மற்ற எண்ணங்களுக்கு ஊக்கமளித்து, என் சுயத்தை அறிய முடியாமல் எனக்கு தடையாக இருந்து, இந்த ஸ்தூல உடலுக்கு மரணத்தை உண்டாக்குகின்றது.

ஆனால், **'அந்த மரணம்'** இந்த ஸ்தூல உடலுக்கு உண்டாகும் பொழுது, இந்த உடலைச் சார்ந்துள்ள உலகம், உறவுகள், சொத்து, சுகம் என அனைத்தும், என்னைச் சார்ந்தவர்களுக்கு துயரத்தை உண்டாக்கி, இறுதியில் உடல் இறப்பிற்குப் பிறகு இல்லாமல் மறைகின்றது.

அதுவே, **'அந்த மரணம்'** இந்த சூக்ஷும மனதிற்கு மட்டும் உண்டாகும் பொழுது, இந்த மனதைச் சார்ந்த அத்தனை ஆசாபாசங்களும் இறப்பதினால், அனைத்து துயரங்களுக்கு காரணமாக இருந்த இந்த மனமும் இறந்து, தன்னைச் சார்ந்தவர்களின் மனதிற்கும் இன்பத்தை இனிதாகப் பெற்றுத் தருகின்றது.

என்னுடைய இந்த ஸ்தூல உடலின் இறப்பு, எனக்கும், என்னைச் சார்ந்தவர்களுக்கும் பயத்தைக் கொடுத்து, ஏராளமான துன்பங்களுக்கு காரணமாக இருக்கின்றது.

அதுவே, என்னுடைய இந்த ஸ்தூல உடல் இருக்கும் பொழுதே, என்னுடைய சூக்ஷும மனதில் உண்டாகின்ற எண்ணங்களை கவனித்து, அவைகளை தீர விசாரித்து, அவைகள் தோன்றுவதற்குக் காரணமான **"நான்"** என்ற மூல எண்ணத்தை முற்றிலும் இறக்கச் செய்வதினால், என் ஆணவம் முற்றிலும் நீங்கி, எனக்கும், என்னைச் சார்ந்தவர்களுக்கும் அளவற்ற ஆனந்தத்தை மட்டுமே உண்டாக்குகின்றது.

இதை அறிவதே, இங்கு **'அறிவு'** அல்லது **'ஞானம்'** எனப்படுகின்றது.

இந்த மனம் இறப்பது என்பது, அவ்வளவு எளிதானது என்று மட்டும் எண்ணி விடாதீர்கள்.

காரணம், எல்லாமே இந்த எண்ணங்களின் எழுச்சியினால் நடைப்பெறுகின்ற விளையாட்டு என்பதினால், எந்த எண்ணத்தின் என் மனம் சிக்கிக் கொண்டுள்ளது என்பதை, என்னால் அறிய முடியாத அளவிற்கு சிலவற்றில் அபிமானமான எண்ணங்கள் என்னை ஆட்டுவிக்கின்றன.

எண்ணங்கள் ஆட்டுவிப்பதை எளிதாக அறிய முடியும் பொழுதுதான், எண்ணங்களின் எழுச்சிகளில் இறப்புகள் தொடக்கமாகின்றன. அது அவ்வப்பொழுதே ஆழமாக என்னால் அலசி ஆராயப்பட்டு, என்னை என் இயல்பான **'இருப்பு நிலைக்கு'** எளிதாக அழைத்துச் செல்கின்றது.

உண்மையில், என் எதார்த்தமான இயல்பும், இருப்பும் என்பது, எப்பொழுதும் நிலைத்து இருக்கின்ற **'ஆனந்த அறிவு நிலையே'** ஆகும்.

பொதுவாக, உடலின் இறப்பை எப்படி, எளிதாக எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாதவாறு, **'பயம்'** என்ற ஒரு எண்ணம் துயரமாக எழுந்து துன்பத்தை உண்டாக்குகின்றதோ, அதுப்போல, மனதின் இறப்பை எளிதாக ஏற்றுக்கொள்ள முடியாதவாறு, அதே **'பயம்'** என்ற ஒரு எண்ணம் துயரமாக எழுந்து மனதிற்கு துன்பத்தை உண்டாக்கி, எண்ணங்களின் இருந்து விடுதலையைப் பெற்றுத்தர, பெரும் தடையாக இருக்கின்றது.

அனைத்து எண்ணங்களும் என்னிடம் இருந்து உண்டாகி, என்னாலேயே அனுபவித்து, எனக்கே இன்பத்தையும், துன்பத்தையும் உண்டாக்குகின்றது என்பதை, எப்பொழுது என் மனம் திடமாக அறிகின்றதோ, அப்பொழுதே, இந்த **'நான்'** என்ற அஹங்கார எண்ணத்தை அறிகின்ற ஆழமான அந்த **'அறிவு'** அனுபவமாகின்றது.

அதனால், இதுவரை பக்கம் பக்கமாக என்னால் எழுதப்பட்டுவந்த **"எண்ணங்கள்"** என்ற புத்தகத்திற்கு முடிவுரை எழுதி, அதற்கு முடிவில் முற்றுப்புள்ளியை வைத்து, புத்தகத்தை முடிவுக்கு கொண்டு வந்து விடுகின்றது.

3. கர்மங்களும், விடுதலையும்

‘இறப்பு’ என்ற ஒரு எண்ணம் எழுந்தவுடன், **‘பயம்’** என்ற ஒரு எண்ணம், அதனைப் பின் தொடர்ந்து எளிதில் வந்து, இந்த மனதை ஆழ்ந்த துன்பத்தில் ஆட்கொள்கின்றது.

இவ்வாறு, எண்ணங்கள் ஒன்றின் பின் ஒன்றாக எழுவதை அறிந்து, அவைகளைத் தகர்ப்பதற்காக மேற் கொள்ளப்பட்ட **‘விசாரம்’** என்ற விவேகத்தின் வெளிப் பாட்டையே இங்கு **‘கர்மம்’** எனப்படுகின்றது. இந்த கர்மம் மனதிற்கு மட்டுமே **‘முக்தி’** கொடுப்பதற்காகச் செய்யப்படுகின்றது.

மற்றபடி, நாம் எண்ணிக் கொண்டிருப்பதுப் போன்று, யாக வேள்வியில் நெய்யை ஊற்றி செய்யப்படுகின்ற செயல் கர்மங்கள் அனைத்தும், மனதிற்கு முக்தியைக் கொடுப்பதற்குப் பதிலாக, இந்த ஸ்தூல உடலை விட்ட பிறகு, சூக்ஷும மனம் வேறு உலகத்திற்குச் சென்று, அங்கு சுகமாக இருக்க வேண்டும் எனக் கருதி, செய்யப்படுகின்றது.

உண்மையில், மனதை இறக்கச் செய்யாமல், இருக்கச் செய்கின்ற கர்மங்கள் அனைத்துமே இன்பத்தை அளிக்காமல், துன்பத்தை மட்டுமே அளிக்கும் தன்மை கொண்டது என்பதை எவன் ஒருவன் அறிகின்றானோ, அவனே, இதுப்போன்ற கர்ம காரியங்களை விடுத்து, மனதிற்கு **‘விடுதலை’** அளிக்கக்கூடிய விசார மார்க்கத்தை விரும்புகின்றான்.

எண்ணங்கள் ஏதுமற்ற மனதில், ஏகாந்தமாக தன் இருப்பில், இந்த தேகம் இருக்கும் பொழுதே, ஆழ்ந்து ஆனந்தமாக இருப்பதையே, **'உண்மையான இன்பம்'** என்று இங்கு கூறப்படுகின்றது. இந்த இன்பத்தை அடைவதற்காக மட்டுமே **'நான்'** என்ற ஒரு எண்ணம் ஓயாமல், பல **'கர்மங்களை'** (செயல்களை) செய்து கொண்டிருக்கின்றது.

அத்தகைய செயல் கர்மங்கள் என்பது, கோவில்களுக்குச் செல்வதும், யாக, யக்ஞுங்கள் செய்வதும், தான தர்மங்கள் செய்வதும், ஆன்மீக உபதேசங்களை ஊர் முழுக்க பிரச்சாரம் செய்வதும் என எல்லாமே இந்த எண்ணங்களினால் வெளிப்பட்டு, **"நான்"** என்ற அஹங் காரத்தை இன்னும் சற்று ஆழமாக மனதில் விதைப்பதற்கு வழியை வகுக்கின்றது.

இவ்வாறு, *'கர்மங்களைச் செய்து மனதை இறக்கச் செய்வதற்குப் பதிலாக, மேலும், மேலும் வலுவாக பிறக்கச் செய்வது மட்டுமே நடைப் பெறுகின்றது'* என்பதை எவன் ஒருவன் விவேகத்தினால் விசாரித்து அறிகின்றானோ, அவனே இந்த எண்ணங்களை எளிதில் கடந்து, கற்பித்துக் கொள்ளப்பட்ட கடவுள் கொள்கைகளில் இருந்து தப்பித்து, தானே அந்த கடவுள் தன்மையை அடைகின்றான்.

இதை அறியாமல், எண்ணத்தின் காரணமாக, பல்வேறு கடவுள்களை கற்சிலைகளில் வடித்துக் கொண்டு, அவைகளை மற்றவர்களால் பலவந்தமாக பயமுறுத்தி திணிக்கப்பட்ட

எண்ணங்கள் என்பதை என்னால் ஏற்க முடியாதவாறு, இந்த மனம் திடமாக கற்பித்துக் கொண்டுள்ளது.

இதை அறியாமல், இவைகளை சிலைகளில் செய்து, கோவில்களில் வழிபட்டு வருகின்ற வழக்கமான பயம், மற்றும் பாதுகாப்பு எண்ணங்களே, என்னை மேலும், மேலும் பலவந்தமாக அதில் பற்றை உண்டாக்க வைத்து, அதன் காரணமாக பல்வேறு ஜாதி, மதங்களை உண்டாக்கி, என் கடைசி மூச்சு உள்ளவரை உற்சாகத்துடன் வாழ முடியாதவாறு செய்து, மன நோயை கொடுத்து, இறுதியில் மரணத்துடன் போராட வைத்து, என் சிறப்பான உடலை சீக்கிரமாகவே சிதைத்து விடுகின்றது.

உடலைக் கொண்டு மனதை அறியும் மகத்தான விசார மார்க்கத்தை அறியாமல், மனதினால் உடலை சிதைக்கின்ற சில சிக்கலான மார்க்கங்களில் சிக்கிக் கொண்டிருப்பதை அறிய முடியாமல் அறியாமை என்னை ஆட்கொண்டுள்ளது.

‘எண்ணம் என்னை ஏமாற்றுகின்றது’ என்ற ஒரு திடமான எண்ணம், என்னுள் உண்டாகாமல், இந்த **‘எண்ணங்களுக்கு ஓய்வு’** என்பது கிடையாது.

எண்ணங்களுக்கு **‘ஓய்வு’** என்ற இறப்பு நிகழ வேண்டுமானால், **‘விடுதலை’** என்ற, மற்றொரு புதிய எண்ணம், பிறக்க வேண்டியதாகின்றது.

4. அறிவும், இருப்பும்

உண்மையில் என் சுய இருப்பிற்கு பந்தமும் இல்லை, விடுதலையும் இல்லை என்று அறிவதற்கே இங்கு **'அறிவு'** அவசியமாகின்றது.

'இருப்பது அறிவு ஒன்று மட்டுமே' என்று அறிவதே, இங்கு **'ஞானம்'** எனப்படுகின்றது.

ஆகவே, எண்ணங்களில் இருந்து விடுதலை வேண்டும் என்ற, ஒரு எண்ணம் என்னுள் எழுந்து, என்னை இங்கும், அங்கும் அலைக்கழிக்க வைத்துக் கொண்டு இருக்கின்றது என்பதை **'நான்'** எப்பொழுது, ஒரு எண்ணமாக அறிந்துக் கொள்ள முடிகின்றதோ, அப்பொழுதே, எளிதில் இந்த எண்ணங்களிடமிருந்து என்னால் விடுதலையைப் பெற்று, வெளியே வரவும் முடிகின்றது.

அதாவது, **'நான்'** என்ற இந்த ஆணவ எண்ணம் இறந்து, என்னை நான் யார்? என்று, விசாரித்து அறிய முற்படும் ஒரு எண்ணம், என்னுள் எழுட்சியாக எழும் பொழுதுதான், என் உண்மையான இருப்பு நிலையை என்னால் எளிதாக அறிய முடிகின்றது.

என்னை நான் **"அறிவு"** என்று அறியாமல், அறியாமைகளிலிருந்து விடுபட முடிவதில்லை.

ஆனால், என்னை எனக்கு **“அறிவு”** என்று, சுட்டிக் காட்டி, என் இருப்பை எனக்கு அறிந்துக் கொள்ள, என்மீது பலவந்தமாக திணித்து, ஏற்றி வைக்கப்பட்ட எந்த எண்ணங்களும் இல்லாமல் இருக்கின்ற, அந்த உயர்வான உன்னத நிலையிலேயே என் **‘இருப்பும்’** எனக்கு சாத்தியமாகின்றது.

பொதுவாக, **‘அறிவு’** என்பது சேகரிக்கப்பட்ட, அல்லது மற்றவர்களினால் திணிக்கப்பட்ட, அனைத்து விசய சுகங்களின் ஒட்டுமொத்த விவகாரங்கள் என்று, இந்த மனதிற்குத் தவறாக, இதுவரை போதிக்கப்பட்டு வந்துள்ளது.

மேலும், தற்பொழுதும் போதிக்கப்பட்டு வருகின்றது. அதற்கான பயிற்சிகளை பல்வேறு பாடத் திட்டங்களாக மனதிற்குக் கொடுத்து, இன்னும் ஏராளமான எண்ணங்கள் உண்டவதற்கு, இன்றைய நவீன கல்வி முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது அனைத்தும் எண்ணங்களின் எமாற்று வேலை என்று அறியப்பட வேண்டும். அதற்கு **‘விவேகம்’** என்பது நம் ஒவ்வொருவருக்கும் அவசியம் இருக்க வேண்டும்.

‘எண்ணங்கள் என்னை ஏமாற்றுகின்றது’ என்பதைக்கூட அறிய முடியாத அளவிற்கு, அறியாமை எண்ணங்கள் என்னிடம், பல்வேறு எண்ணங்களாக ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்ற **‘விழிப்புணர்வு’** எனக்கு என்று

உண்டாகின்றதோ, அன்றே **‘நான்’** மனதையும், அறிவையும் பிரித்து வைத்துக் கொண்டுள்ள பிரிவினை எண்ணத்தை எளிதில் கண்டு பிடித்து விடமுடியும்.

இதுவே, எழுகின்ற பல்வேறு எண்ணங்களின் ஏமாற்று வேலையை அகற்றுகின்ற, அதி உன்னதமான **‘விவேகம்’** எனப்படுகின்றது.

இந்த விவேகம் என்ற **‘அறிவு’** என்னிடமே இருந்துள்ளதை, இதுவரை அறிந்துக் கொள்ள முடியாத அளவிற்கு, அறியாமை எண்ணங்கள் பலவாறாக என்னைச் சூழ்ந்து, என் சுய இருப்பை மறைத்துக் கொண்டிருந்தது.

எண்ணங்கள் என்ற மறைப்பு நீங்கியதும், என்னுடைய உண்மையான அறிவு, இயல்பாய் இருப்பில் இருந்துக் கொண்டு பிரகாசிக்கின்றது.

இதில், உண்மையான அறிவுப் பிரகாசத்தை மங்கச் செய்யும் மறைப்புகள் என்பது, இன்று என்னிடம் ஏற்றிவைக்கப்பட்ட, அதி நவீன கல்வி முறைகளின் கண்டு பிடிப்புகளாக நம்மிடையே தற்பொழுது பயன்பாட்டில் இருக்கின்ற பள்ளிப் பாடத் திட்டங்கள், கம்ப்யூட்டர், வாட்ஸப், முகநூல், இணையதளம், தொலைக்காட்சி, தொலைப்பேசி மற்றும் தொலைத் தொடர்பு போன்ற எண்ணிகையில் அடங்காத, பல அதி நவீன பொருள் இருப்புக்கள், நம் உண்மை இருப்பை அறிய முடியாமல், விசய சுகங்கள் என்ற

விபரீத எண்ணங்களின் வாயிலாக, என் மீது வலுக்கட்டாயமாக ஏற்றி வைக்கப்பட்டுள்ளது.

இவைகளே, பல்வேறு எண்ணங்களாக ஏற்றி வைக்கப்பட்டு, **‘அறிவு’** என்ற போர்வையில், என் உண்மை யான **“அறிவின் இருப்பை”** என்னிடமிருந்து முற்றிலுமாக மறைக்கின்றது.

இந்த உண்மை அறிவை அறிய மறுக்கின்ற அளவிற்கு, அதிகமான அறியாமைகளை நான் **‘அறிவு’** என்று தவறாகச் சேகரித்துக் கொண்டு, அவைகளை மட்டுமே உண்மையில் **‘அறிவு’** எனக் கருதிக் கொண்டிருந்த அபிமானத்தின் விளைவு, அந்த அறியாமைகள் அனைத்தும், அடர்த்தியாக என்னுள்ளே, உண்மை அறிவைப் போன்று, ஆழமாக என் ஆழ் மனதை ஆட்கொண்டு, இதுவரை என்னை ஏமாற்றி வந்துள்ளது.

இந்த அரிய உண்மையை, அறிய முடியாமல் இருந்துவந்த நான், சற்றே விழித்துக்கொண்டு, இவைகளில் இருந்து விலக விரும்புகின்றேனோ, அப்பொழுதே, இதுவரை சேகரிக்கப்பட்டுவந்த இந்த அறியாமை எண்ணங்களுக்கு இறப்பு தொடங்கி விட்டது.

இந்த எண்ணங்களின் இறப்பு மெல்ல, மெல்ல என்னுள் நிகழும் பொழுது, பல அதிசய எண்ணங்கள் மாயையின் வடிவத்தில் என்னை ஏமாற்றுகின்றது என்பதை, எளிதாக அறிந்துக் கொள்ளவும் முடிகின்றது.

5. சுய பரிசோதனை

‘சுய பரிசோதனை’ என்ற ஒரு பெயரைக் கொண்ட, ஒரு எண்ணம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

அந்த எண்ணம் என்பது, எனது **‘வாட்ஸப்’** அல்லது **‘முகநூல்’** பகுதிகளை, இனி ஒரு வாரம் மட்டும் பார்க்கப் போவதில்லை என்ற ஒரு தீர்மானத்தை சுயபரிசோதனையாகக் கொண்டு, அதை நடைமுறைப் படுத்த முழு முயற்சி என்னால் எடுக்கப்படுகின்றது.

ஆனால், என்ன நடக்கின்றது என்று, என்னுடைய எண்ணங்களை சற்றே உற்று ஆராய்ந்துப் பார்க்கும் பொழுது, உண்மையில் அந்த ஒரு எண்ணம் ஓராயிரம் எண்ணங்களுக்கு வித்திடுகின்றது என்பதை என்னால் அறிய முடிகின்றது.

ஆகவே, இந்த எண்ணங்களால் மட்டுமே, என்றும் ஏமாற்றப்பட்டு வருகின்றேன் என்ற உண்மை எனக்கு நன்கு புலப்படுகின்றது.*

உண்மையில் அந்த எண்ணங்கள் என்னை, சும்மா இருக்க விடுவதில்லை.

என்னால் இதுவரை அறிவாக ஏற்றி வைத்துக் கொள்ளப்பட்ட பல்வேறு விசயங்களில் இருந்து, அதில் எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்றைக் கொண்டுவந்து என்னிடம்

கொடுத்து, அதில் ஆசையை நுழைத்து, அதனை என் இயல்புக்கு ஒத்துவருவது போன்று ஒரு மாயையை உண்டாக்கி, அந்த எண்ணத்தின் என்னை ஏமாந்து போகச் செய்து விடுகின்றது.

எனக்கு நேர்மை, நாணயம், பக்தி, பணிவு என்ற விசயங்களில், அதீத அபிமானம் இருப்பின், அவைகளில் என்னை சிக்க வைத்து, அந்த எண்ணங்கள் என்னை ஏமாற்றுவதை அறிய முடியாத அளவிற்கு **'நான்'** என்னை உயர்வாக கருதிக் கொண்டு இருப்பதையும், அதே அபிமான எண்ணங்களால் நான் ஏமாற்றப்பட்டு, இறுதியில், என்னுடைய தீர்மானம் தகர்கப்பட்டு, என்னால் தடை உண்டாக்கிய விசய சுகங்களை, மீண்டும் சமுதாய நல் நோக்கத்திற்காக நடைமுறைப்படுத்தி, அவைகளை மீண்டும் என்னுடைய அனுபவத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

என்னுடைய **'வாட்ஸப்'** அல்லது **'முகநூல்'** பகுதிகளை, ஒரு வாரம் மட்டும் பார்க்கப்போவதில்லை என்ற ஒரு தீர்மானம், தகர்க்கப்பட்டு விட்டதை அறியாமல், மீண்டும் அதில் திளைத்திருக்கின்றேன்.

இதுவே, **'மாயை'** எனப்படுகின்றது.

இதை அறியவிடாமல் தடுப்பதே **'அறியாமை எண்ணங்கள்'** எனப்படுகின்றது.

6. முக்தனும், பக்தனும்

இந்த மாயை என்ற மகத்தான சக்தி என்னை எப்படி எல்லாம் எண்ணங்களால் ஆட்டிப்படைக்கின்றது என்பதை ஆழமாக அறிய முற்படும் பொழுதுதான், என்னுடைய அறியாமைகளையும் என்னால் எளிதில் அறிய முடிகின்றது.

இவ்வாறு, அறிவை அறிய விடாமல், என்னை அறியாமையில் தள்ளுவது என்பது, இந்த மாயையின் மகத்தான விளையாட்டு எனும்பொழுது, அந்த மாயையை வெல்பவனே மகத்தானவன் ஆகின்றான்.

அவனே உண்மையில் மனதிடமிருந்து முழுமையான விடுதலையை அடைந்த **'முக்தன்'** எனப்படுகின்றான். அவ்வாறின்றி, மனதை பற்றிக் கொண்டு, மயக்கத்தில் இருக்கின்றவன் மாயையின் **'பக்தன்'** எனப்படுகின்றான்.

இவ்வாறு, அனைத்து எண்ணங்களினால் **"நான்"** வடிவமைக்கப்பட்டிருக்கின்றேன் என்று எண்ணும் பொழுது, என்னுடைய இந்த ஸ்தூலமான மனித உடலும், எண்ணத்தினால் மட்டுமே என்மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்பதை எளிதாக என்னால் அறிய முடிகின்றது.

அப்படியானால், **நான் யார்?** என்ற ஒரு எண்ணம் என்னுள் உதயமாகின்றது.

எதை அறிந்து கொள்வதற்காக, இந்த ஆறாவது அறிவு எனக்கு கொடுக்கப்பட்டதோ, அதை அறிந்து கொள்ளாமல், மற்ற உலக விசயங்களை உள்வாங்கி திணித்துக் கொள்வதையே **‘அறிவு’** என்று இதுவரை நான் தவறாக அறிந்து இருந்தேன் என்பதை இந்த கேள்வி எனக்கு விடையளிக்க தொடங்குகின்றது.

உண்மையில் எண்ணங்கள் அற்ற நிலையில் இந்த **‘அறிவு (சித்)’** பிரகாசிப்பதையே **‘ஞானம்’** என்று அறிய முடியாத அளவிற்கு, பல்வேறு எண்ணங்களால் ஆன மாயையினால் முழுவதுமாக சூழப்பட்டிருந்தேன்.

எப்பொழுது, என்னையே நான் விசாரிக்கத் தொடங்கினேனோ, அப்பொழுதே, எண்ணங்களால் மட்டுமே ஆக்கப்பட்ட இந்த உடலை, **“நான்”** என்று அபிமானித்து இருந்ததை அறிந்துக் கொண்டேன். உடனே, நான் என்னை சுதாகரித்துக் கொண்டு, இந்த உடலாலும், மனதாலும் விடுபட விரும்புகின்றேன்.

இந்த மனதையும், உடலையும் கடந்த மகத்தான இருப்பே என் இயல்பு என்பதை விசாரித்து அறிய விளைகின்றேன்.

7. <u>இருமை எண்ணங்கள்</u>

அனைத்துமே எண்ணங்கள் என்பதை இதுவரை அறியாமல், ஏதாவது ஒன்றைப் பற்றிக் கொண்டு, அது என்னுடை மனைவி, மக்கள், சொத்து, சுகம், கடவுள், மதம், என்று எதையாவது பற்றிக் கொண்டு, எண்ணங்களால் பரிதவித்து இருந்து வந்துள்ளேன்.

மேலும், எழுகின்ற எண்ணங்களில் சில நல்லதாகவும், சில கெட்டதாகவும் கருதிக் கொண்டு, இருமைகளான நல்லதும், கெட்டதும் என்னால் இன்றி மற்றவர்களால் கொடுக்க முடியாது என்பதை, **“தீதும், நன்றும் பிறர்தர வாரா!”** என்று பெரியவர்கள் கூறியதை, இதுவரை அறியாமல் இருந்திருக்கின்றேன்.

இதுவெல்லாம், எனக்கு நன்றாகப் புரிகின்றது, ஏகப்பட்ட புத்தகங்களின் வாயிலாகப் படித்தும், பலர் கூறக்கேட்டும் என்னுள் திணித்துக் கொள்ளப் பட்டுள்ளது. ஆனால், இவைகள் நடைமுறையில் சாத்தியம் இல்லை என்ற ஒரு எண்ணத்தை, மீண்டும் எனக்குள் ஏற்படுத்தி, இந்த மாயை என்னை எப்படியெல்லாம் ஏமாற்றியுள்ளதை எண்ணி ஆழ்ந்த வியப்படைகின்றேன்.

மாயையின் மயக்கத்தில் இருந்து விழித்துக் கொண்டேன். ஆனால், அது என்னை மீண்டும் உறக்கத்திற்கு உட்படுத்தும் என்பதையும் அறிந்து விழிப்புடன் என்றும்

இருப்பதே மீண்டும் இங்கு **"விவேகம்"** என அறிவுறுத்தப் படுகின்றது.

இவ்வாறே, விழிப்பு, உறக்கம் என்ற இருமை எண்ணங்களின் இப்போதைய எண்ணம் எது என்றும், அந்த எண்ணத்தின் ஆரம்பமும், முடிவும் என்ன என்பதையும் அறிந்து, இந்த இருமை எண்ணங்களின் மீது எப்பொழுதும் விழிப்புடன் இருக்கின்றேன்.

இவ்வாறு, ஏராளமான எண்ணங்கள், என்னிடம் தோன்றிக்கொண்டே இருப்பதையும், அவைகளை ஒவ்வொன்றாக நீக்க, நான் எடுக்கும் முயற்சிகள், எனக்கு ஒரு விதமான சலிப்பை எளிதில் உண்டாக்கி விடுகின்றது.

இந்த மாயை **'சலிப்பு'** என்ற எண்ணத்தை என்னுள் விதைத்து, என்னுடைய முயற்சிக்கு தடையை உண்டாக்குகின்றது என்பதை விழிப்புடன் இருந்தால் மட்டுமே, அதை கவனித்து, என்னால் நீக்க முடியும்.

காரணம், எனக்கு கொடுக்கப்பட்ட ஆறாவது அறிவு என்னை ஏராளமாக சிந்திக்க வைத்து, என் சித்தத்தை நிரப்பி வைத்துக்கொண்டு, அந்த சித்தை (அறிவை) அறிவதற்கு தடையாக இருந்ததை எண்ணும் பொழுது, அந்த உண்மையான ஆனந்தத்தை, எங்கு தவற விட்டுள்ளேன் என்று அறிவதில், இதுப் போன்ற எண்ணங்களினால், மாயை என்னை தேக்கமடையச் செய்கின்றது என்பதையும் விழிப்புடன் நான் கவனிக்க வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

ஆனந்தம் என்பது கொடுக்கப்பட்ட அறிவை அறியாமல், ஏற்றி வைத்துள்ள விசயங்களை அறிவாக நம்பிக் கொண்டிருந்ததால் மட்டுமே, இந்த ஆனந்தம் என்னிடம் இருந்து பறிபோனது.

என்னுடைய இயல்பான ஆனந்தம் திணித்துக் கொண்ட அறிவினால், என்னிடம் இருந்து பறிபோனது என்பதை எண்ணும் பொழுது, எண்ணங்களால் திணிக்கப்படாத, நிர்மலமான மனதினால் மட்டுமே ஆனந்தத்தை நிலையாக அனுபவிப்பது என்பது, எளிதில் சாத்தியமாகின்றது.

உண்மையில், என் எண்ணங்களே இந்த அனைத்தையும் படைத்துக் கொண்டு, அதில் என்னை எப்படியாவது சிக்க வைத்துக் கொண்டு, என்னை எமாற்றி வருகின்றது.

உண்மையான அறிவு என்பது, திணிக்கப்பட்ட எண்ணங்கள் ஏதுமற்ற நிலையில், என் சுய இருப்பில், சுடர் விட்டுப் பிரகாசிப்பதை, என்னுடைய சுயத்தில் இருக்கும் பொழுது மட்டுமே சுகமாக அறிகின்றேன்.

இதுவே, மெய்யான கல்வி, மேன்மையான கல்வி. மரணமற்ற கல்வி. மகத்தான கல்வி என பலவாறாக எனக்கு கற்பிக்கப்பட்டு, அதில் ஒரு **‘விருப்பு’** என்ற எண்ணத்தை விதைத்துக் கொண்டேன்.

இத்துடன், எப்பொழுது, மனப்பாடம் செய்யக் கூடிய, கட்டாயக் கல்வி முறை நம்மிடையே கற்பிக்கப்படதோ, அப்பொழுதே, நம் சுய அறிவு மங்கி விட்டதையும், சுய நலமான மனிதன் உண்டாகி விட்டதையும் அறிந்து, அதில் ஒரு **'வெறுப்பு'** என்ற எண்ணத்தையும் திணித்துக் கொண்டேன்.

இதுப்போன்ற பல்வேறு இருமை எண்ணங்கள் என்னுள் எழுந்து, ஏற்றத்தாழ்வுகளை என்னுள் விதைத்து, என் சுய இருப்பில் என்னை சுகமாக இருக்க விடாமல், இந்த மாயை பலவாறாக என்னை ஏமாற்றுகின்றது.

8. <u>எண்ணங்கள் ஏமாற்றுகின்றன</u>

என்னுடைய ஒவ்வொரு எண்ணங்களும், என்னை எப்படியெல்லாம் ஏமாற்றுகின்றது என்றும், மற்றவர்கள் என்மீது திணிக்கப்படுகின்ற வியாபார எண்ணங்களால், என்னை மாயை எவ்வாறெல்லாம் ஆட்டுவிக்கின்றது என்பதைக்கூட, எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு, என் எண்ணங்கள் இன்றைய நவீன தொலைக்காட்சி பெட்டிகளிலும், சோஷியல் மீடியாக்களிலும், இணைய தளங்களிலும், இது தவிர தொலைத் தொடர்புகளான தொலைபேசி, முகநூல், வாட்ஸப் என அனைத்திலும் இணைந்து, ஆனந்தம் அடைவதாக எண்ணி,

என்னை நானே ஏமாற்றிக் கொண்டு, இந்த திணிக்கப்பட்ட எண்ணங்களினால் துயரத்தை அடைகின்றேன்.

அந்த அளவிற்கு, இந்த அபிமான எண்ணங்கள் எளிதில் என்னை ஆட்கொண்டிருக்கின்றன.

இதன் வாயிலாக, பல்வேறு விசயங்களை அரைகுறையாக அறிந்துக் கொண்டு, அவற்றின் உண்மைத் தன்மையை அறியாமல், என்னுடைய அஹங்காரத்தின் வாயிலாக உண்டான, அறியாமையின் காரணமாக, அவசியமற்ற அனேக எண்ணங்களை வலுக்கட்டாயமாக முகநூல், வாட்ஸப், தொலைக்காட்சி, தொலைபேசி என அனேக சாதனங்களின் வாயிலாக, மற்றவர்களுக்கு மாறி, மாறித் திணித்து, அதில் ஒரு திருப்தியை அடைவதாக என்னை நானே ஏமாற்றி வந்திருக்கின்றேன்.

ஒவ்வொரு எண்ணங்களும், ஏதாவது ஒரு விசயத்தை மையமாக வைத்து அமைக்கப்பட்ட என்னுடைய எண்ணங்களே என்றும், அவைகள் எழுத்துக்களால் எழுதப்பட்ட புத்தகங்களாக மாற்றப் படுவதையும், ஒவ்வொரு உருவங்களும் என்னுடைய எண்ணங்களே என்பதையும், அவைகளை புகைப்பட ஆல்பங்களாக மாற்றி, மற்றவர்களுக்கு புகுத்தப் படுவதையும் நான் இதுவரை அறியாமல் இருந்துள்ளேன்.

அதாவது, உலக விவகாரங்களான பணம், பதவி, பட்டம், சொத்து, சுகம் வறுமை என பல்வேறு எண்ணங்களாக,

ஒரு சாரரை இந்த எண்ணங்கள் உண்டாக்குகின்றது என்றால், ஆன்மீக விவகாரங்களான, அதைவிட ஆழமாக கடவுள்கள், கர்மங்கள், மூட நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், மதம், இனம் என வெகுசாரரை வேறு சில எண்ணங்களாக ஆட்டிப்படைக்கின்றது என்பதையும் இதுவரை அறியாமல் இருந்திருக்கின்றேன்.

அதாவது, தீய எண்ணங்களில் இருந்து விலகுவதாக நினைத்துக் கொண்டு, நல்ல எண்ணங்களில் அபிமானம் வைத்து, அதில் சிக்கிக் கொண்டிருக்கின்றேன்.

பொதுவாக, நல்ல எண்ணமாக இருப்பினும், தீய எண்ணமாக இருப்பினும், நான் அதில் சிக்கிக் கொண்டுள்ளேன் என்பதை அறியாத வரை, என்னை எண்ணங்களிலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாது.

மேலும், நான் உண்டாக்கி வைத்துள்ள பல்வேறு எண்ணப்பதிவுகளை நான் மட்டுமே அழித்துக் கொள்ள முடியும். இதற்காக மற்றவர்கள் உதவி புரிய முடியாது.

காரணம், என்னுடைய பல்வேறு எண்ணப் பதிவுகளான சம்ஸ்காரங்கள் என்னால் மட்டுமே சுயமாக உண்டாக்கிக் கொள்ளப்பட்டவை.

அவைகள், எத்தகைய விளைவுகளை எனக்கு உண்டாக்கும் என்பதை நான் மட்டுமே அறிவேன். இதில் மற்றவர்கள் தலையிட்டு, அதற்குத் தீர்வு கொடுக்க முடியாது.

எனவே, எனக்கு நன்மை பயக்கும் ஒரு எண்ணத் திற்கும், தீமை பயக்கும் ஒரு எண்ணத்திற்கும், முழுக்க, முழுக்க நானே காரணம் ஆகின்றேன்.

பொதுவில், எதாவது ஒரு வகையில் எண்ணங்களிடம் நான் சிக்கிக் கொண்டுள்ளேன் என்பதை அறியும்பொழுது மட்டுமே, அதிலிருந்து என்னால் முழுமையாக விடுபட முயற்சி மேற்கொள்ளப் படுகின்றது.

பொதுவாக, என்னுள் ஏற்றி வைக்கப்பட்ட நல்ல எண்ணங்களோ, அல்லது தீய எண்ணங்களோ, எதுவாக இருப்பினும், அவைகள் அனைத்தும் என்னால் மட்டுமே உண்டாக்கப்பட்டு இருக்கின்றது என்பதை அறிந்து, அவைகளை முழுமையாக அழிப்பது என்பதுவும் என்னால் மட்டுமே ஆகக்கூடியது என்பதையும், பகுத்து அறிவதையே இங்கு **'விவேகம்'** எனப்படுகின்றது.



9. <u>எனக்கு உதவ யாராலும் முடியாது</u>

என்னால் கற்பிக்கப்பட்ட இறைவனோ, மற்றவர்களோ, இந்த உலகமோ எதுவாக இருப்பினும், அவைகளால் எனக்கு உதவ முடியாது.

இதனையே வள்ளுவரும்,

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

என்று எளிதாக உபதேசிக்கின்றார்.

இங்கு மெய்யை (உடலை) வருத்தக் கூலி தரும் என்று, அவர் கூற வருவது, உலகியல் வாழ்க்கையில் அற்ப பொருள்களை அடைவதற்கான முயற்சியாக, உடலால் உழைப்பது உத்தமம் என்றும், அதற்கு பரம்பொருளின் உதவி, அவசியம் இல்லை என்றும் பொருள் கொள்ளக் கூடாது.

அதாவது, என்னால் மட்டுமே உண்டாக்கிக் கொள்ளப்பட்ட எண்ணற்ற எண்ணங்களினால் விளைந்த இந்த மனதை, என்னால் மட்டுமே உறுதியுடன் விசாரத்தின் வாயிலாக வெட்டி வீழ்த்த முடியும்.

அதற்காக, என்னுடைய இந்த உடல் இருக்கும் பொழுதே, அதன் துணைக் கொண்டு, என்னுள் எழுகின்ற

எண்ணங்களை விசாரித்து, அவைகளை அவ்வப்பொழுதே வெட்டி வீழ்த்தி, மனதை இறக்கச் செய்வதற்காக மேற்கொள்கின்ற கடினமாக முயற்சியே உழைப்பு என்றும், இந்த கர்மத்தை (செயலை) செய்ய உடல் அவசியம் ஆகின்றது என்றும் அறிய வேண்டும்.

அதாவது, பல்வேறு எண்ணங்களினால் ஏற்றி வைக்கப்பட்ட என்னுடைய மனதை, இந்த உடல் இருக்கின்ற காலத்திலேயே, அதனைக் கொண்டு, எண்ணங்களை தீவிரமாக விசாரித்து, முளைக்கின்ற எண்ணங்களுக்கு மூலமான ஆணி வேரை முளையிலேயே வெட்டி வீழ்த்துகின்ற விவேகமான செயலைச் செய்கின்ற முயற்சிக்கு, உடலை வருத்துதல் அவசியம் என்றும், அதற்காக என்னால் கற்பித்துக் கொள்ளப்பட்ட எந்த தெய்வத்தின் உதவியும் அவசியம் ஆகாது என்றும், இந்த சுய முயற்சிக்கு கூலியாக, தன் சுய இருப்பு வெளிப்படுவதே, இங்கு கூலியாக கிடைக்கும் என்றும் இந்தக் குறள் கூற வருகின்ற கருத்து ஆகும்.

மேலும், நானே உண்டாக்கிக் கொண்ட தெய்வங்களும், அதற்கான ஆலயங்களும் என்னுடைய ஆழ்மனதின் அபிமானம் என்று அறிந்து, என்னுள்ளே எண்ணங்களாகவே இறைவன் அகத்திலும், புறத்திலும் உள்ள ஆலயங்களில் எழுந்தருளியுள்ளான் என்றும், மேலும் அவன் என் எண்ணங்களின் வாயிலாகவே அருள் பாலிப்பது போன்ற நம்பிக்கைகளும் என்னுள் உண்டான கற்பித எண்ணங்கள் என்று அறிந்து, இவ்வாறு என்னால் ஏற்றி வைத்துக் கொள்ளப்பட்ட இறை அபிமான எண்ணங்களையும் வேரோடு

வெட்டி வீழ்த்தப்பட வேண்டிய கட்டாயம், இந்த மனதிற்கு இருப்பதை அறிந்து, அந்த மனதை இல்லாமல் செய்வதே ஆன்மீகத்தில் அறிய வேண்டிய அதி உன்னதமான உண்மை ஆகும்.

10. ஆன்மீகமும், லௌகீகமும்

எதை அறிவதற்கு, வேறு எதையும் அறியத் தேவை இல்லையோ, அதை அறியாமல், மற்ற அனைத்து சாஸ்திரங்களையும் அறிந்துக் கொள்கின்ற அபிமானத்தினால், அனேக ஆன்மீக விசயங்களான மந்திரங்கள், ஜபங்கள், உபாசனைகள், பூசைகள், யாக, யக்ஞங்கள் என்ற பல எண்ணங்களை இந்த மனதில் மேலும், மேலும் ஏற்றி, ஏகப்பட்ட ஆன்மீக விசயங்கள் ஆழமாக இந்த மனதில் திணிக்கப்பட்டு, எண்ணங்களை விடுவதற்கு பதிலாக, இன்னும் வலுவாக தக்க வைத்துக் கொள்கின்ற தவறான அணுகுமுறையை இன்றைய ஆன்மீகம் என்ற பெயரில் நம்மிடையே நடைமுறையில் இருக்கின்றது.

இந்த ஆன்மீகத்தின் தவறான போக்கை அறிந்து, அதில் இருந்து முழுமையாக விலக முடிந்தால் மட்டுமே, நல்லது, கெட்டது என்ற இருமை எண்ணங்களில் இருந்து மனதை எளிதாக விடுவித்துக் கொண்டு, தன் சுய இருப்பில், எப்பொழுதும் தனித்து இருக்க இயலும் என்பதை அறிய வேண்டும்.

இதுப்போன்ற எண்ணங்களை எதிர்கொண்டு, அவைகள் உதிக்கும் இடத்தில் வெட்டி வீழ்த்தாமல் இருப்பின், வீணாக வெந்ததைத் தின்று, விதி வந்ததும் சாவதைத் தவிர வேறு வழியே கிடையாது என்பதையும், எண்ணங்களே நமக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்ற கட்டாயப் பாடம் என்பதை, இன்றைய நடைமுறையில் நாம் கண் முன்னே காணாமல், கடந்து போக முடியாது.

ஆகவே, ஆன்மீகம் முதலான அனைத்தும் இந்த மனதின் கற்பிதமே!

இதை அறியாமல், உலகத்தை உண்மை என்று கருதுபவன், அதன் அபிமானத்தினால், ஆன்மீகம் நல்லது என்றும், லௌகீகம் கெட்டது என்றும், இருமை எண்ணங்களினால், மனதை பிரித்து வைத்துக் கொண்டு, அவரவர்களுக்கு பிடித்த ஒன்றை பற்றிக் கொண்டு பரிதவிக்கின்றனர்.

இதில் தனக்கு பாதிப்பு என்று வரும் பொழுது, அது ஆன்மீகமாக இருந்தாலும், லௌகீகமாக இருந்தாலும் விட்டு விடத் தயாராக இருக்கின்ற மனம், இதில் உள்ள பற்றை அறியும் பொழுதுதான் அதன் இறப்பை ஏற்கத் தயாராகின்றது.

மனம் இறப்பதினால், என்னுடைய ஆன்மீகம் அல்லது லௌகீகம் சார்ந்த வாழ்க்கை முறைக்கு ஆபத்து வந்து விடுமோ என்ற பயம் காரணமாக, எண்ணங்களை விசாரிப்பதில் தயக்கம் உண்டாகின்றது.

இன்னும் சிலருக்கு எண்ணங்களை விசாரிக்க ஆரம்பிக்கத் தொடங்கிய உடனே, அவர்களின் ஆழ்மன அக்கிரமங்கள் பலதும் வெளிக் கிளம்பி, அவர்களது உண்மையான உள்ளத்தை படம் பிடித்துக் காட்டி விடுகின்றது.

இந்த மோசமான இவர்களது எண்ணங்களைக் கண்டு இவர்கள் பயந்து, இந்த விசார மார்க்கத்தை விட்டு வெகுதூரம் விலகிச் செல்கின்றார்கள்.

11. விசாரமும், வீண் பயமும்

உண்மையில் இதுப் போன்ற எண்ணங்களை வெளிச்சம் போட்டு காட்டுகின்ற இந்த விசார முறை ஒன்றினால் மட்டுமே மனம் தன் இருளான குப்பைகளை வெளியேற்றி, வெளிச்சத்தினை வெகு விரைவாக சந்திக்க இயலும்.

விசாரத்தினால் விளைந்த விஷமான பல எண்ணங்கள் இவனிடம் இருந்து வெளிப்படுவதை இவனால் ஏற்றுக்கொள்ள மனமின்றி, இதனால் எனக்கு ஏதாவது பாதிப்பு வந்து விடுமோ என பயப்படுகின்றான். அந்த பயத்தின் காரணமாக, இந்த எண்ணங்களை விசாரிப்பதில் இருந்து விடுபடுகின்றான்.

இந்த பயம் என்ற எண்ணத்தினால் மனம் என்னை ஏமாற்றி விட்டதை அறியாமல், அதே மனதுடன் சிக்கி, தன்னை சீரழித்துக் கொள்கின்றான்.

அதுவே, இது மனதின் கற்பிதம் என்று தெளிவாக அறிந்தவன், பயமின்றி, இது தன்னால் கற்பிக்கப்பட்ட உலகம் என்றும், உண்மையில் இந்த எண்ணங்களும், இந்த எண்ணங்களால் நடைப்பெற்ற செயல்கள் என்று எதுவும் இல்லை என்றும், முடிவாக இந்த உலகமும், உறவுகளும் இல்லை என்றும் உணர்ந்து, எண்ணங்களற்ற நிலையில் ஆழ்ந்த அமைதியை அனுபவிக்கின்றான். அவனே ஆனந்த அனுபவத்திற்கு ஆளாகின்றான்.

ஆகவே, என்னை மரணத்தை நோக்கி அழைத்து செல்வதும், மரணமற்ற பெருவாழ்வை வாழ வைப்பதுவும் **‘எல்லாம் எண்ணங்களே’** என்றால், அது மிகையாகாது.

ஆகவே, நானே உண்டாக்கிக் கொண்ட அனைத்து நல்ல மற்றும் கெட்ட எண்ணங்களை, நானாகவே முற்றிலும் அழித்து, அந்த முழுமையான அறிவை உணர முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு, எண்ணங்கள் அற்ற நிலையில் இயல்பாய் இருக்கின்ற என் இருப்பை அறிவதே, உண்மையில் **‘அறிவு’** எனப்படும். திணிக்கப்பட்ட விசயங்களை **‘அறிவு’** என்று கூறுதல் அறிவுடமை ஆகாது.

அந்த உயர் அறிவை, மற்ற எதனாலும், எவர்களாலும் எனக்கு கொடுக்க முடியாது. அது எண்ணங்கள் அற்ற நிலையில் என் ஒருவனால் மட்டுமே தனித்து இருந்து அறியப்பட வேண்டிய அனுபவம் ஆகும்.

இதைவிடுத்து, எத்தனை எண்ணங்களை எந்த பெயரிலும், எந்த உருவத்திலும் ஏற்றிக் கொண்டாலும், அது, மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட அறிவு என்பதை அறிய வேண்டும், அது என்னுடைய **'சுய அறிவு'** அல்ல என்பதையும் உணர வேண்டும்.

ஆகவே, இந்த பல்வேறு எண்ணங்கள் என்ற ஏமாற்றுக்காரனை கண்டறிந்து, அவனிடமிருந்து தப்பிப் பிழைக்க ஒரே வழி, தற்காலிகமாக சில மாதங்களுக்கு இந்த இணையதள விசயங்களான பலதும், பல பரிமாணங்களில், பல எண்ணங்களாக என்னை வந்து தாக்காமல் இருக்க, இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து கேட்பதையும், காண்பதையும் தவிர்த்து, எண்ணங்களுக்கு வலிமைச் சேர்க்கின்ற செயல்கள் எதையும் செய்யாமல், சும்மா இருப்பது மட்டுமே எனக்கு சுகமான அனுபவத்திற்கு வழி வகுக்கும்.

அதைவிடுத்து, இதை ஏற்காமல் இருக்க என்ன செய்யலாம்? என்று, ஏதாவது ஒரு தந்திரத்தை இந்த மாயை என் முன் வைத்து, அதற்காக ஒரு எண்ணத்தை உண்டாக்கி, அதில், தற்போதைய மன நிலைக்கு ஏற்ப, நியாயத்தை ஒரு எண்ணமாக எனக்கு கற்பித்து, என்னை சீரழிக்க முயற்சிக்கும்.

உண்மையை அறிய விரும்பும் போது, இவைகளை விடுவது ஒன்றே, என்னை சரியான அந்த இருப்பு நிலையில் இயல்பாய் இருக்க வைக்கும்.

ஆனால், இவைகளை விட முடியவில்லை எனும் பொழுது, என்னுடைய எண்ணங்களே என்னை ஏமாற்றுகின்றது என்பதைக்கூட, அறிய முடியாத அளவிற்கு, அறியாமை என் அறிவை மறைக்கின்றது எனலாம்.

ஆகவே, என்னுடைய எண்ணங்களினாலும், மற்றவர்களின் எண்ணங்களினாலும், நான் சிக்கிக் கொண்டுள்ளேன் என்பதை என்று அறிகின்றேனோ, அன்றே, ஆன்மீக வாழ்க்கைக்கும், லௌகீக வாழ்க்கைக்கும் மனதினால் முழுக்கு போட்டு விட்டு, என் இருப்பு நிலையில் இயல்பாய் இருக்க முடியும்.

12. <u>விவேகமும், விடுதலையும்</u>

மற்றபடி மனம் ஏமாற்றுகின்ற மதம், மதச்சின்னங்கள், கோவில்கள், வழிபாட்டு முறைகள், கடவுள் சிலைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், விழாக்கள், விஷேசங்கள் என்று மனம் எதில் சிக்கிக் கொண்டிருந்தாலும், அதில் இருந்து விடுபவது ஒன்றே இங்கு **‘விடுதலை’** எனப்படுகின்றது.

மனதினால் அனைத்தும் விடப்படும் பொழுது, எண்ணங்கள் அற்ற நிலையில் விழிப்படைந்த விவேகம் வெளிப்பட்டு, உண்மை அறிவை (சித்தை) என்னுள்ளே காட்டிக் கொடுக்கும். இது மனதின் இறப்பினால் உண்டாகின்ற **'முக்தி'** எனப்படும். இது, உடலினால் விடப்படுகின்ற **'மரணம்'** அல்ல.

உடலினால் ஒன்றையும் விட வேண்டும் என்று அவசியம் இல்லை. காரணம், கானல் நீர் பொய் என்று அறிந்த பின்னரும், என் கண் முன்னே அது காணப்படுவது போன்று, மனதினால் நான் விட்ட விசயங்கள் என் கண் முன்னே மீண்டும் காட்சியாகும். மற்றவர்களால் அவைகள் நடை முறையில் மீண்டும் எனக்கு திணிக்கின்ற முயற்சிகள் நடைப்பெறும்.

சித்துநான் நிறைந்தோன் என்ற திடம் மறவாதிருந்தால்
எத்தனை எண்ணினாலும் ஏதுசெய்தாலும் என்ன
நித்திரை உணர்ந்த பின்பு நிற்கின்ற கனாவே போல
அத்தனையும் பொய் தானே ஆனந்த வடிவு நானே.

(கைவல்ய நவநீதம் - சந்தேகம் தெளிதல் படலம் 173)

இப்பொழுது, எனக்கு எது நடந்தாலும், அது பொய் என்று என் சுய அறிவுக்கு நன்றாகத் தெரியும். அதனால் நான் சிறிதும் பாதிப்பை அடைய மாட்டேன்.

இவ்வாறு அனைத்தையும் உடலால் இன்றி, மனதினால் விடுவதற்கே எனக்கு பயமாக இருக்கின்றது என்றால், மனம் **'பயம்'** என்ற எண்ணத்தில் சிக்கிக் கொண்டிருப்பதை அறிய முடியாமல் இருக்கின்றோம் எனலாம்.

உண்மையில், இவைகளை விடுவது என்பது அவ்வளவு எளிதல்ல, காரணம், பல்வேறு எண்ணங்களாக இதுவரை சிறிது, சிறிதாக நாம் பிறந்தது முதற்கொண்டு, தற்பொழுது, இந்த வயதுவரை நமக்கு கற்பிக்கப்பட்டு இருப்பதினால், உடனே மனம் இதை ஏற்காது. இவைகளை விட்டு விடவும் எளிதில் விரும்பாது.

இங்கு சரியான புரிதல் என்ற **'விவேகம்',** விசாரத் தினால் உண்டானால் மட்டுமே, **'வைராக்கியம்'** என்ற பற்றற்ற தன்மை உண்டாகும்.

இவ்வாறு, விசாரத்தின் விளைவாக உண்டான விவேகத்தினால் மட்டுமே, திடமான வைராக்கியம் உண்டாகும். திணிக்கப்பட்ட புத்தக அறிவினால் உண்டாக்கப்பட்ட விவேகம், திடமான வைராக்கியத்தை என்றுமே உண்டாக்காது.

அதனால்தான் அனேக சாஸ்திர நூல்களை கற்றறிந்தவர்கள் வைராக்கியத்தை அடைய முடியாமல், ஆன்மீகம் என்ற போர்வையில் அனேக விசயங்களை விட முடியாமல் பிடித்துக் கொண்டுள்ளனர்.

வைராக்கியம் உண்டாகாதவரை, எண்ணங்கள் ஓயாது, எண்ணங்கள் ஓயாமல், இருப்பு நிலையில் இருக்க முடியாது. இருப்பில் இல்லாமல் இன்பத்தை அனுபவமாக்க முடியாது. இன்பம் அனுபவமாக வில்லையானால், முக்தி கிடையாது. முக்தி மனதிற்கு உண்டாகாவிட்டால் துன்பத்தை தவிற்கவே முடியாது.

ஏதோ உடலும், மனமும் இருக்கின்றவரை இப்படியே வாழ்ந்துவிட்டு, இறந்துவிடலாம் என்று ஒரு எண்ணம் நம்மை சமாதானம் செய்து விடும். ஆனால், மரணத் தருவாயில், மனதின் போராட்டத்தை வார்த்தைகளினால் வர்ணிக்க முடியாது.

ஆனால், நவீன விஞ்ஞானத்தின் விபரீத முன்னேற்றத் தினால் ஒரு சவுகரியம் இருக்கத்தான் செய்கின்றது. அது இந்த உடல் சாகும் பொழுது, ஏதாவது ஒரு மருத்துவமனையில் மயக்க ஊசியினால், மனதை மயங்கச் செய்து, சுகமான மரணத்தை எளிதாக உடலால் அடைந்து விடலாம் என்று, இந்த மனம் ஒரு எண்ணத்தை ஏற்படுத்திக் கொண்டு, தனக்குத் தானே சமாதானம் செய்துக் கொள்ள முயற்சிக்கும்.

இதுவும் எண்ணத்தின் ஏமாற்று வேலை என்பதை அறிய வேண்டும். அதாவது, இந்த ஸ்தூல உடலுக்கு வேண்டுமானாலும் சுகமான இறப்பை எளிதாகக் கொடுத்து விடலாம். ஆனால், சூக்ஷும மனதிற்கு சுகமான நிலையை, இந்த மனித உடல் இருக்கும் பொழுது மட்டுமே விசாரத்தினால் கொடுக்க முடியும்.

அதைவிடுத்து, மனிதனைத் தவிர மற்ற எந்த ஜீவராசிகளின் உடலில் இந்த மனம் சிக்கிக் கொண்டாலும், விசாரம் செய்வதற்கான ஆறாவது அறிவு இன்றி, அந்த உடல் எடுத்ததின் பயனாக துன்பத்தில் இருந்து தப்பிக்க முடியாமல் தவிக்க வேண்டியது வரும்.

ஆறறிவு படைத்த மனித உடல் கிடைத்தும், அதனைக் கொண்டு மனதை விசாரிக்கத் தவறினால், இந்த மனதிற்கு இன்ப, துன்பங்களிலிருந்து விடுதலை என்பது என்றுமே உண்டாகாது.

ஆகவே, இந்த ஸ்தூல உடல் இறப்பிற்குப் பிறகு, சூக்ஷ்ம மனம் இறக்காமல், இன்னும் சில பிறவிகளுக்கு அந்த மனதின் ஆசைகளை அனுபவிக்க, அதற்கான உடலை எடுக்க வேண்டிய கட்டாயத்தை உண்டாக்கி விடும்.

ஆகவே, பயம் என்பதும் ஒரு எண்ணமே ஆகும். எனவே, அந்த எண்ணத்திலிருந்தும் விடுபட முயற்சிக்க வேண்டும். அதைவிடுத்து, இந்த பயம் என்ற ஒரு எண்ணத்தை, அந்த அறிவின் மீது ஏற்றி வைத்துக் கொண்டு, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது **‘விவேகம்’** ஆகாது.

ஆகவே, உதிக்கின்ற எண்ணங்களை உடனடியாக விசாரித்து, அது தற்காலிகமாகத் தோன்றி மறைகின்ற எண்ணங்களான உணவு உண்பது, மல, ஜலம் கழிப்பது போன்றவைகளைப் பற்றி கவலைப் படாமல், அதன்

தேவைகளை அப்பொழுதே பூர்த்தி செய்து விடுங்கள். அதனால் எந்த பாதிப்பும் மனதிற்கு உண்டாகாது.

ஆனால், மனம் ஆழமாகப் பற்றியுள்ள பல வருட உறவுகள், மனைவி, மக்கள், மற்றும் பரம்பரை சொத்துக்கள், ஆன்மீக, ஆடம்பர வாழ்க்கை வசதிகள் போன்ற எண்ணங்களை மட்டுமே உஷாராக கவனித்து, எதில் நான் சிக்கிக் கொண்டுள்ளேன் என்று விசாரித்து, அதனால் உண்டான விவேகத்தினால் கிடைத்த வைராக்கியத்தைக் கொண்டு, மனதில் பற்றியுள்ள பலமான பந்தங்களை மட்டுமே நீக்கினால் போதுமானது.

இந்த பந்தங்களில் இருந்து உண்மையில் மனதிற்கு மட்டுமே விடுதலை வேண்டியுள்ளது. இந்த விடுதலையை **'முக்தி'** என்று இங்கு அழைக்கின்றோம்.

உடலுக்கு விடுதலை என்பது மரணத்தின் வாயிலாக மட்டுமே சாத்தியமாகக் கூடியது. இதனை **'மரணம்'** என்று இங்கு அழைக்கப்படுகின்றது.

அதைவிடுத்து, உடலால் மனைவியை விட்டு விடுவதும், பத்திரங்களை எழுதி சொத்துக்களை விற்று விடுவதும் என்பது எண்ணங்களின் ஏமாற்று வேலை எனலாம்.

உடலால் விடப்பட்ட உறவுகளையும், சொத்துக் களையும் மனதினால் விட முடியாமல் எத்தனையோ பேர்கள் சந்நியாஸம் வாங்கியும், ரிஷிகேஷம் சென்றும், அங்கே

ஆன்மீகம் என்ற அபிமானத்தினால் உத்திராட்சம், மூலிகைகள் போன்ற வியாபாரத்தை வெகு சிறப்பாக பற்றிக் கொண்டு, பயன் அடைந்து வருவதை இன்றும் நாம் கண்கூடாகக் காணலாம்.

ஆகவே உடலால் அனைத்தையும் விட்டு விடுவது என்பது, **'விடுதல்'** என்ற எண்ணத்தினால், என் மனம், என்னை ஏமாற்றுகின்றது என்பதை, அறிய முடியாத **'அறியாமை'** என்ற எண்ணத்தின் வேலையாகும்.

எண்ணங்களால் உண்டான மனதை, உடலைக் கொண்டு விசாரித்து, விழிப்புற்ற விவேகத்தினால் நீக்காமல், மற்ற எவைகளைக் கொண்டு நீக்க முயற்சித்தாலும், அது முற்றிலும் மூடத்தனமானது என்பதை அறிகின்ற **'அறிவு'** மட்டுமே வேண்டும்.

நிறைவடைந்தது.

எல்லாமே எண்ணங்கள்



சுவாமி பிரபஞ்சநாதன்